**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 297/2019 P.W.6/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராஜையன் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கையன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **10.08.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் A2 to A5 present. A1 died. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் காவல்துறையில் பணிபுரிந்து தற்பொழுது பணி ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன்னர் நான் 2013-ம் வருடம் மண்டைக்காடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்த பொழுது குளச்சல் காவல் நிலையத்தில் 09.12.2013-ம் தேதியன்று கூடுதல் பொறுப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன்.

2. அப்பொழுது குளச்சல் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணதாஸ் என்பவர் அன்றைய தினம் நிலையப் பொறுப்பில் இருந்த பொழுது செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து அந்த புகார்வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண் 538/2013 சட்டப்பிரிவுகள் 147, 294(b), 342, 323, 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPWH Act சட்டப்பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேலும் அவர் புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை விசாரணை அதிகாரியான எனது பார்வைக்கு வைத்தார்.

4. இவ்வழக்கினை நான் அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் 09.12.2013–ம் தேதி காலை 11.00 மணிக்கு சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் காளிதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து அவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. மேலும் சாட்சிகள் 1 முதல் 3 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்தேன். மேலும் அன்றைய தினம் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபரான ஐயப்பன், சசிகுமார் மற்றும் கண்ணன் (எ) சண்முகவடிவேல் ஆகியோர்களை ரீத்தாபுரம் சந்திப்பில் வைத்து 13.00 மணிக்கு கைது செய்து கைது நடிவடிக்கைகள் மேற்கொண்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

6. மேலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் கிருஷ்ணதாஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் 06.01.2013–ம் தேதியன்று இவ்வழக்கில் காயம்பட்ட வாதி செல்வி என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7. மேலும் இவ்வழக்கில் மற்ற குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஜெயன் மற்றும் பாலன் ஆகியோர்கள் நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று வெளியே சென்றனர்.

8. அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 147, 294(b), 342, 323, 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPWH Act சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. இவ்வழக்கின் சம்பவயிடம் சென்றேன் என்றால், சரிதான். சம்பவயிடமானது அதிக மக்கள் புலங்கும் இடம் என்றால், சரிதான். அதனை சுற்றி பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள வீடுகள் அமைந்துள்ளது என்றால், சரிதான். அதில் மக்கள் குடியிருந்தார்கள் என்றால், சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கையில் சம்பவ தேதியானது 03.12.2013 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது 09.12.2013–ம் தேதி என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கை மற்றும் கால்களால் அடித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

3. பொதுவாக குற்ற சம்பவத்தில் காயமடைந்த நபர்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லும் பொழுது அது குறித்த தகவல்கள் காவல்நிலையத்திற்கு உடனடியாக அனுப்பப்படும் என்றால், சரிதான். இவ்வழக்கில் மருத்துவமனையில் இருந்து காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்ததற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால், சரிதான்.

4. குற்றம் சுமத்தப்பட்ட நபர் பாலன் என்பவர் செல்வியின் சேலையை பிடித்து இழுத்ததாக புகார் வாக்குமூலத்தில் இல்லை என்றால், சரிதான். 3–ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சசி என்பவர் கொத்த வேலை செய்யும் கரண்டியை எடுத்து அ.சா.1–யை வெட்டியதாக புகார் வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையிலும் இல்லை என்றால், சரிதான்.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபர் பாலன் என்பவர் பத்திரத்தை கிழித்ததாக புகார் வாக்குமூலத்திலும், முதல் தகவல் அறிக்கையிலும் இல்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் சசி என்பவர் சாட்சி அஜில் என்பவரை சுவற்றில் பிடித்து தள்ளியதாக அவரது விசாரணை வாக்குமூலத்தில் இல்லை என்றால், சரிதான்.

6. அ.சா.3 அஜில் என்பவர் போலிஸ் விசாரணை வாக்குமூலத்தில் அ.சா.1 செல்வியை குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கட்டையில் தலையில் அடித்து ஓடையில் தள்ளியதாக கூறியுள்ளாரா என்றால், இல்லை. அ.சா.1 மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்ததாகவும் சிகிச்சையின் பொழுது வாந்தி வந்ததால் மேல்சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட விவரத்தை எனது விசாரணையில் கூறினாரா என்றால், இல்லை.

7. சாட்சி அஜில் என்பவர் சாட்சி செல்வியின் சகோதரியின் மகன் என்று விசாரணையில் தெரியவந்ததா என்றால், இல்லை. சாட்சி விஜயன் என்பவர் புகார்தாரரின் கணவர் என்றால், சரிதான். நான் எத்தனை நாட்கள் குளச்சல் காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பு உதவி ஆய்வாளராக இருந்தேன் என்றால், சரியாக ஞாபகம் இல்லை.

8. நான் என்றைய தினம் விசாரணை முடித்து நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால், 06.01.2014–ம் தேதி தாக்கல் செய்தேன். நான் 06.01.2014–ம் தேதி குளச்சல் காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்ததை நிருபணம் செய்வதற்கு ஆவணத்தை தாக்கல் செய்ய இயலுமா என்றால், Case Diary உள்ளது.

9. எனது மேல் அதிகாரியின் வேண்டுகோளின் அடிப்படையில் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

10. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் இந்த சம்பவம் நடைபெறவில்லை எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.